அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்விநிறுவனம்
கோயம்புத்தூர் - 641043

இரண்டாம்அகமதிப்பீட்டுத்தேர்வு–**II**அக்டோபர் -2025

வகுப்பு: இளங்கலைமூன்றாமாண்டுத்தமிழ் மதிப்பெண் : 60
துறை :தமிழ் நேரம் : 3மணி

தாள் குறியீட்டுஎண் - **23BTMPA3**பணிவாய்ப்புத் தேர்வு– **III**

பயன்கள்

CO1:தமிழ் மொழியின் இலக்கணஅறிவைக் கற்பித்தல்.

CO2:இலக்கணத்தின் வழி அக வாழ்வியலைவளர்த்தெடுத்தல்

CO3:சித்தர்களின் வரலாறுமற்றும் வாழ்வியலையும் உணர்ந்துகொள்ளுதல்

CO4:பதிப்புமற்றும் உரையின் வரலாறுகுறித்துக் கற்பித்தல்

CO5:முத்தமிழின் வளர்ச்சிநிலைகளைஅறிந்துக்கொள்ளச் செய்தல்.

1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்துவட்டமிடுக.

1. பாலை நிலத்திற்குரிய கடவுள் CO2K2
   அ) கொற்றவை ஆ) முருகன் இ) இந்திரன்ஈ) திருமால்
2. அகப்பொருளுக்கு இலக்கணமாக திகழும் நூல் CO2K2
   அ) முத்தொள்ளாயிரம் ஆ) தஞ்சைவாணன் கோவை
   இ) நந்திக்கலம்பகம் ஈ) தமிழ்விடுதூது
3. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் CO2K2
   அ) நான்கு ஆ) ஆறு இ) எட்டு ஈ) பத்து
4. வெற்றி பெற்றோர் சூடும் பூ எது? CO2K2
   அ) தும்பை ஆ) வாகை இ) ஆத்தி ஈ) பனம்பூ
5. பரத்தையர்கள் என்போர் எந்த நிலத்தோடு தொடர்புடையவர்கள் CO2K2
   அ) முல்லைநிலம் ஆ) மருதநிலம் இ) நெய்தல் நிலம் ஈ) குறிஞ்சிநிலம்
6. “ஏறியமடல் திறம்“ எத்திணைக்கு உரியது? CO2K2
   அ) கைக்கிளை ஆ) பெருந்திணை இ) குறிஞ்சி ஈ) முல்லை
7. ஒரு நாளுக்கு எத்தனை நாழிகை CO2K2
   அ) 20 நாழிகை ஆ) 40 நாழிகை இ) 60 நாழிகை ஈ) 80 நாழிகை
8. வரைவு என்பதன் பொருள் CO2K2
   அ)களவு ஆ)கற்பு இ)திருமணம் ஈ)ஊடல்
9. தலைவன் தலைவியோடு கூற்று நிகழ்த்தாதவர் CO2K2
   அ)நற்றாய் ஆ)செவிலி இ)தோழி ஈ)பாங்கன்
10. வேப்பம்பூ மாலையாருக்குரியது CO2K2
    அ)சோழர்ஆ)பாண்டியர்இ)சேரர் ஈ)பல்லவர்
11. “விரிச்சி“ என்பது என்ன? CO2K2
    அ)நற்சொல் ஆ)வீரம் இ)அசரீரி ஈ)அலர்
12. தலைவிதான் கொண்ட களவு ஒழுக்கத்தை முறையாக வெளிப்படுத்துதல்CO2K2
    அ)திணைமயக்கம் ஆ)அறத்தோடுநிற்றல் இ)இயற்பழித்தல் ஈ)வாயில் நேர்தல்
13. சித்தி என்பதன் பொருள் CO3K2
    அ)சக்தி ஆ)வெற்றி இ)அறிவு ஈ)வலிமை
14. ஆதிசித்தன் என்று அழைக்கப்படுபவர் யார்? CO3K2
    அ)பிரம்மன் ஆ)திருமால் இ)சிவபெருமான் ஈ)முருகன்
15. எதையும் நினைத்த மாத்திரத்தில் அடையும் திறன் CO3K2
    அ)இலகிமா ஆ) மகிமா இ)அணிமா ஈ)பிராப்தி
16. நிலையாமையை உணர்ந்த யோகி எனப் போற்றப்படுபவர்? CO3K2
    அ)திருமூலர் ஆ)பட்டினத்தார் இ)அகத்தியர் ஈ)பாம்பாட்டிச்சித்தர்
17. “உண்மையான வழிபாடு ஆன்மாவழிபாடு “ என்று கூறியவர்? CO3K2
    அ)சிவவாக்கியர் ஆ)அகத்தியர் இ)திருமூலர் ஈ)கொங்கணர்
18. சரஸ்வதி என்று சித்தர்கள் எதனை கூறுகிறார்கள் ? CO3K2
    அ)அகத்திக்கீரை ஆ)வல்லாரைக்கீரை இ)முருங்கைக்கீரை ஈ)புதினாக்கீரை

19. நந்தவனத்திலோர் ஆண்டி என்று பாடியவர்? CO3K2
அ)பட்டினத்தார் ஆ)போகர் இ)புலிப்பாணி ஈ)கடுவெளிச் சித்தர்
20. தொல்காப்பியத்தில் குறிப்பிடும் “நிறைமொழி மாந்தர்“யார்? CO3K2
அ)சித்தர்கள் ஆ) புலவர்கள் இ)அறிஞர்கள் ஈ)கவிஞர்கள்
21. இஸ்லாமிய சித்தர் யார்? CO3K2
அ)நபிகள் நாயகம் ஆ)அப்துல் ரகுமான் இ)பீர் முகமது ஈ)முகமதுநபி
22. உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியைக் கடவுளாக வழிபட்டசித்தர்CO3K2
அ)பாம்பாட்டிசித்தர் ஆ)புலிப்பாணி இ)கடுவெளிச் சித்தர் ஈ)போகர்
23. பசிப்பிணி மருத்துவர் CO3K2
அ)போகர் ஆ)சிவப்பிரகாசர் இ)வள்ளலார் ஈ)திருமூலர்
24. ஆன்மாக்கள் கும்மி அடிப்பதாக உருவகித்து பாடியவர் யார்? CO3K2
அ)பத்திரகிரியார் ஆ)பட்டினத்தார் இ)கொங்கணச்சித்தர் ஈ)குதம்பைச்சித்தர்
25. ”பிண்டத்தை உணர்ந்தால் அண்டத்தை உணரலாம்” என்று கூறியவர்கள் CO3K2
அ)ஞானிகள் ஆ)யோகிகள் இ)சித்தர்கள் ஈ)அறிஞர்கள்
26. குண்டலினிசக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறுவது
அ)மாங்காய் பால் ஆ)தேங்காய் பால் இ)பசும்பால் ஈ)பருத்திப்பால்
27. பிரம்மாவிற்கு ஒரு இரவும் பகலும் கழியும் காலஅளவு CO3K2
அ) 1000 யுகங்கள் ஆ)2000 யுகங்கள் இ) 3000 யுகங்கள் ஈ)4000 யுகங்கள்
28. ”எனக்கு முன்னேசித்தர் பலர் இருந்தார் அப்பாயானும் வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்”என்று கூறியவர் CO3K2
அ)பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) திருமூலர் ஈ) திருவள்ளுவர்
29. பத்திரகிரியார் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது CO3K2
அ) விஞ்ஞானப் புலம்பல் ஆ) மெய்ஞானப் புலம்பல்
இ) அறிவுப்புலம்பல் ஈ) உண்மைப்புலம்பல்
30. குதம்பை என்பதன் பொருள் CO3K2
அ) கழுத்தணிஆ) காதணிஇ) காலணிஈ) இடையணி
31. “சிவயோகத்தில் அமர்ந்த யோகி’’ எனக் கூறப்படுபவர் யார்? CO3K2
அ) போகர் ஆ) திருமூலர் இ) அகத்தியர் ஈ) புலிப்பாணி
32. “சித்தாந்தம்“ என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் வருகிறது CO3K2
அ) சிலப்பதிகாரம் ஆ) திருமந்திரம் இ) திருவாசகம் ஈ) கம்பராமாயணம்
33. ”மெய்ஞான குருவைப் பணிந்து நிற்க வேண்டும் ”என்று கூறியவர் யார் ?CO3K2
அ) அகத்தியர் ஆ)பாம்பாட்டிச்சித்தர் இ) கடுவெளிசித்தர் ஈ)கோரக்கர்
34. யோகியருக்கும் ஞானிகளுக்கும் இவ்வழியில் உயிர் பிரியும் CO3K2
அ) கபாலம் ஆ) கண்கள் இ)வாய் ஈ)மூக்கு
35. கடவுளைக் காணமுயல்வர்கள் பக்தர்கள் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் எனக்கூறும் நூல் எது ? CO3K2
அ) தேவாரம் ஆ) திருவாசகம் இ) திருக்கோவை ஈ)திருமந்திரம்
36. ”பாவம் செய்யாதிருமனமே!பாவம் செய்தால் எமன் கொண்டோடிப் போவான்” -யார் கூற்று? CO3K2
அ) பாம்பாட்டிச்சித்தர் ஆ) கடுவெளிச் சித்தர் இ) சிவவாக்கியார் ஈ) வால்மீகியார்
37. ஆறுமுக நாவலரை உரைநடை கைவந்த வள்ளலார் என யார் பாராட்டினார்?
அ) வீரமாமுனிவர் ஆ) பருதிமாற் கலைஞர் CO5 K2
இ) இராமலிங்க அடிகளார் ஈ) வேத நாயகம் பிள்ளை
38. வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என பாடியவர் CO5 K2
அ) வீரமாமுனிவர் ஆ) பருதிமாற் கலைஞர் இ) வள்ளலார் ஈ) சிவவாக்கியார்
39. தமிழில் வெளிவந்த முதல் புதினம் CO5 K2
அ) பிரதாப முதலியார் சரிதம் ஆ) கருவாச்சி காவியம்
இ) குளத்தங்கரை அரசமரம் ஈ) கரிப்பு மணிகள்
40. திருவருட்பாவின் ஆசிரியர் CO5 K2
அ) வள்ளலார் ஆ) பருதிமாற் கலைஞர் இ) வீரமாமுனிவர் ஈ) சிவவாக்கியார்

41. மாயூரம் வேத நாயகம் பிள்ளை எழுதிய பெண்களுக்கு ஏற்ற அறமுறைகளைக் கூறும் நூல் CO5K2
அ) பெண்மதி மாலை ஆ) சர்வசமய கீர்த்தனை
இ)திருவருள் மாலை ஈ) தேவமாதா் அந்தாதி
42. நான்காம் தமிழ்ச் சங்கம் என புகழப்படும் மதுரை தமிழச் சங்கத்தை நிறுவியவர்
அ) பூர்ணலிங்கம் பிள்ளை ஆ) பருதிமாற் கலைஞர் CO5K2
இ) வீரமாமுனிவர் ஈ) பாண்டிய துறைத்தேவர்
43. தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்? CO5K2
அ) மறைமலையடிகள் ஆ) பருதிமாற் கலைஞர்
இ) வீரமாமுனிவர் ஈ) பூர்ணலிங்கம் பிள்ளை
44. தமிழ்த் தென்றல் எனப் போற்றப்படுபவர் யார்? CO5K2
அ) பருதிமாற் கலைஞர் ஆ) மறைமலையடிகள்
இ) திரு.வி.கா ஈ) கா.சுப்பிரமணிய பாரதி
45. முதன்முதலில் தமிழ் இலக்கிய வரலாற்றை தமிழில் எழுதியவர் CO5K2
அ) பருதிமாற் கலைஞர் ஆ) கா.சுப்பிரமணிய பாரதி
இ) திரு.வி.கா ஈ) பூர்ணலிங்கம் பிள்ளை
46. சைவ சமய குரவர் நால்வர் வரலாறு பற்றி எழுதியவர் யார்? CO5K2
அ) பருதிமாற் கலைஞர் ஆ) கா.சுப்பிரமணிய பாரதி
இ) சா.சுப்பிரமணியபிள்ளை ஈ) பூர்ணலிங்கம் பிள்ளை
47. முத்தமிழ் வித்தகா் எனும் பெயரை கொண்டவர் CO5K2
அ) அண்ணா ஆ) கா.சுப்பிரமணிய பாரதி
இ) மு.கருணாநிதி ஈ) பூர்ணலிங்கம் பிள்ளை
48. 1000 நரம்புகளைக் கொண்ட யாழ் CO5K2
அ) வில்யாழ் ஆ) பேரியாழ் இ) மகர யாழ் ஈ) செங்கோட்டியாழ்
49. இசையை எத்தனை வகையாகப் பிரித்தனர் CO5K2
அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
50. சங்கீரணம் என்னும் தாளத்தைக் கண்டறிந்தவர் CO5K2
அ) வரகுண பாண்டியன் ஆ) ரவிவர்மன் இ) பார்ர்திபன் ஈ) மகேந்திரவர்மன்
51. இசை நுட்பங்களை விவரிக்கும் நூல் CO5K2
அ) சிலப்பதிகாரம் ஆ) சீவக சிந்தாமணி இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி
52. யாருடை காலத்தில் திருப்புகழ் இயற்றப்பட்டது CO5K2
அ) மராட்டியர் ஆ) சீக்கியர் இ) பல்லவர் ஈ) ஐரேப்பியர்
53. தில்லை திருத்தல கீர்த்தனையை இயற்றியவர் CO5K2
அ) பூர்ணலிங்கம் பிள்ளை ஆ) வெள்ளை வாரணனார்
இ) முத்துத்தாண்டவர் ஈ) அண்ணாமலை ரெட்டி
54. தாண்டக வேந்தர் எனப்படுபவர் CO5K2
அ) திருநாவுக்கரசர் ஆ) சம்பந்தர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
55. இசைக்கு மற்றொரு பெயர் CO5K2
அ) வேளாண் வேதம் ஆ) நான்மறை இ) கந்தர்வ வேதம் ஈ) பாட்டு
56. தமிழ்நாட்டில் தோன்றிய இசைவாணர் CO5K2
அ) முத்துசாமி தீட்சிதர் ஆ) தியாகராச சுவாமிகள்
இ) சியாமாசாஸ்திரி ஈ) பாரதியார்
57. மும்மூர்த்திகளில் ஒருவர் CO5K2
அ) பாபநாசம் சிவன் ஆ) அருணகிரிநாகர் இ) சியாமாசாஸ்திரி ஈ) பாரதியார்
58. முழவு என்பதன் பொருள் CO5K2
அ) பறை ஆ) உறுமி இ) மிருதங்கம் ஈ) மத்தளம்
59. பஞ்சுரம் என்பது CO5K2
அ) குறிஞ்சிப்பண் ஆ) முல்லைப்பண் இ) நெய்தல்பண் ஈ) பாலைப்பண்
60. சாமவேதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது? CO5K2
அ) கானம் ஆ) சாமகானம் இ) சாமப்பண் ஈ) சாமப்பாட்டு